



# உயிர்த்தழுதலின் ஸ்தலங்கள்

## ஒளியின் வழியை ஜெபித்தல்

Imprimatur:
The Most Reverend J. Michael Miller, CSB,
Archbishop of Vancouver
30 March 2023

The Imprimatur is an official declaration that a book or pamphlet is free of doctrinal or moral error. No implication is contained therein that the one who has granted the Imprimatur agrees with the contents, opinions or statements expressed.

# உள்ளடக்க குறிப்பு

முன்னுரை ........................................................................................................ 1
தொடக்க ஜெபம்..................................................................................2

## பதினான்கு உயிர்த்தழுதலின் ஸ்தலங்கள்

I. இயேசு உயிர் பெற்று எழுதல்
II. சீடர்கள் காலியான கல்லறையைக் கண்டுபிடிக்கின்றனர்
III. இயேசு மகதல மரியாளுக்குக் தோன்றுகிறார்.
IV. எம்மாவு வழியில் சீடரைச் சந்தித்தல்
V. இயேசு அப்பம் பிட்கும்போது தன்னை வெளிப்படுத்துகிறார்
VI. இயேசு சீடர்களுக்குத் தோன்றுதல்.
VII. உயிர்த்தெழுந்த இயேசு அவர்களுக்கு அமைதியையும் மன்னிக்கும் சக்தியை**யும்** அளிக்கிறார்.
VIII. உயிர்த்தெழுந்த இயேசு தோமாவின் விசுவாசத்தைப் பலப்படுத்துகிறார்.
IX. உயிர்த்தெழுந்த இயேசு திபேரியா கடலின் அருகே சீடர்களுடன் உணவருந்துகிறார்
X. உயிர்த்தெழுந்த இயேசு, பேதுருவை மன்னித்து, அவருடைய ஆடுகளை மேய்க்க அவரை வலியுறுத்துகிறார்
XI. உயிர்த்தெழுந்த இயேசு சீடர்களை உலகிற்கு அனுப்புகிறார்.
XII. உயிர்த்தெழுந்த இயேசு விண்ணேற்றம் அடைகிறார்
XIII. மரியாளும் சீடர்களும் தூய ஆவியாருக்காக காத்திருக்கிறார்கள்.
XIV. உயிர்த்தெழுந்த இயேசு தூய ஆவியாரை அனுப்புகிறார்.

# முன்னுரை

ஈஸ்டர் மணிகள் ஒலிக்கின்றன. இயேசு உயிர்த்தெழுந்தார், மகிழ்ச்சியையும் புதிய வாழ்க்கையின் வாக்குறுதியையும் கொண்டு வருகிறார். ஒளியின் வழியான வியா லூசிஸ்-வும் (Via Lucis), சிலுவையின் வழியான வியா க்ரூசிஸை-வும்(Via Crucis) ஒருவகையாக முயற்சியாகும். திருச்சிலுவையின் பயணத்தின் வழி இயேசுவின் இறுதி நேர பாடுகள் மற்றும் மரணத்தைத் நினைவுறுத்துகின்றனர். உயிர்த்தெழுதல் ஸ்தலங்கள் என்றும் அழைக்கப்படும் ஒளியின் வழி, கிறிஸ்தவ நாட்காட்டியில் மிகவும் மகிழ்ச்சியான நேரமான ஈஸ்டரின் ஐம்பது நாட்களைக் கொண்டாடுகிறது. பயண உருவகத்தைப் பயன்படுத்தி, ஒளியின் வழி இருள் மற்றும் துன்பத்தின் அனுபவத்திலிருந்து ஒளி மற்றும் நம்பிக்கையின் அனுபவத்திற்கு நகர்கிறது.



## தொடக்க ஜெபம்

**அனைவரும்**: அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா.
மகன்களே மகள்களே பாடுவோம்!
விண்ணரசரான மாமன்னர்,
இன்று சாவை வென்று வெற்றி சிறந்தார்,
அல்லேலூயா!

## சிலுவை அடையாளம்

**வாசகம்:** உரோமையர் அவர் இறந்ததுபோலவே நாமும் அவரோடு ஒன்றித்து இறந்தோமெனில், அவர் உயிர்த்தெழுந்தது போலவே நாமும் அவரோடு ஒன்றித்து உயிர்த்தெழுவோம். நாம் இனிமேல் பாவத்துக்கு அடிமைகளாய் இராதபடி, நம்முடைய பழைய மனித இயல்பு அவரோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது. இவ்வாறு பாவத்துக்கு உட்பட்டிருந்த நம் இயல்பு அழிந்து போகும். இது நமக்குத் தெரியும். ஏனெனில் இறந்தோர் பாவத்தினின்று விடுதலை பெற்றுவிட்டனர் அன்றோ? கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின், அவரோடு வாழ்வோம் என்பதே நாம் கொண்டுள்ள நம்பிக்கை.(உரோமையர் 6:5-8).

**சிந்தனை:** ஒளியின் புதல்வியரும் புதல்வருமாகிய நாம்,
உயிர்த்த ஆண்டவருக்குச் சாட்சிகளாக,
நம்பிக்கையின் பாதையான ஒளியின் வழி நடப்போம்.
கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைத் தியானித்து,
நம் வாழ்வில் அவரை ஒளிரச் செய்யும்
ஒளியின் பாதையைக் கண்டுபிடிப்போம்..



**அவர் கூறியபடியே உயிருடன் எழுப்பப்பட்டார். (மத்தேயு 28: 5-6)**

## முதலாம் ஸ்தலம்

# இயேசு உயிர் பெற்று எழுதல்

---

**எல்**

திவ்ய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம். திருச்சிலுவையாலும், உயிர்த்தெழுதலின் ஒளியாலும், நீங்கள் உலகை மீட்டுள்ளீர்.

**வாசகம் :**

அப்பொழுது வானதூதர் அப்பெண்களைப் பார்த்து, "நீங்கள் அஞ்சாதீர்கள்; சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என எனக்குத் தெரியும். அவர் இங்கே இல்லை; அவர் கூறிய படியே உயிருடன் எழுப்பப்பட்டார். அவரை வைத்த இடத்தை வந்து பாருங்கள். **(மத்தேயு 28: 5-6)**

*செபத்திற்காக மௌனமாக இருக்கவும்*

**செபம் :**

ஆண்டவரே, நீர் உருவாக்கிய நாள் இது. கிறிஸ்துவை மரித்தோரிடமிருந்து உயிர்தெழச் செய்து, எங்களையும் கிறிஸ்துவோடு எழுப்பி உமது மக்களாக உருவாக்கினீர். மீட்பின் வார்த்தைகளை கேட்கும் எங்கள் உள்ளங்களை பற்றி எரிய செய்யும். நண்பர்கள் மற்றும் அந்நியர்களின் பிரசன்னத்தின் வழியாக, முதன் முதலில் பாடுபட்ட இயேசு கிறிஸ்துவின் முகத்தையும் அவரது மகிமையையும் எங்களுக்கு வெளிப்படுத்தி, அமைதியை அருளும். உம்மோடு என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற உமது திருமகன் இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். **ஆமென்**

**அல்லேலூயா**

அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா
அந்த ஈஸ்டர் காலை, விடியற்காலையில்,
நம்பிக்கையோடு பெண்கள் தங்கள் வழியே சென்று,
இயேசு வைக்கப்பட்டிருந்த கல்லறையைத் கண்டுபிடிக்கின்றனர்.

**அல்லேலூயா**



**அவர் இங்கே இல்லை (மத்தேயு: 28: 1-6)**

இரண்டாம் ஸ்தலம்

# சீடர்கள் காலியான கல்லறையைக் கண்டுபிடிக்கின்றனர்

---

**எல்**

திவ்ய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.
திருச்சிலுவையாலும், உயிர்த்தெழுதலின் ஒளியாலும், நீங்கள் உலகை மீட்டுள்ளீர்.

**வாசகம் :**
பின்னர், கல்லறைக்கு முதலில் வந்து சேர்ந்த மற்றச் சீடரும் உள்ளே சென்றார், கண்டார்; நம்பினார். **(யோவான் 20:8)**.

*செபத்திற்காக மௌனமாக இருக்கவும்*

**செபம் :**
தந்தையே, அனைத்தையும் படைத்தவருமான கடவுளே, இன்று மிகுந்த மகிழ்ச்சியான நாள். நம்பிக்கையை இழக்கத் தொடங்கியவர்களுக்குக் இயேசு தோன்றி, முன்னறிவித்ததைக் காண அவர்களின் கண்களைத் திறந்தார்: முதலில் அவர் இறந்து, பின்னர் உயிர்த்தெழுந்தார். உயிர்த்தெழுந்த இயேசு நம், கண்களையும் உள்ளங்களையும் திறப்பாராக, அப்பம் பிட்கும்போது நாம் அவரை அறிந்துகொள்ளவும், அவருடைய உயிர்த்தெழுந்தலின் வழியாக அவரைப் பின்பற்றவும் உதவுவாராக. **ஆமென்**

**அல்லேலூயா**

அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா

அன்பான அப்போஸ்தலர் யோவான்,

புனித பேதுருவை விட வேகமாக ஓடி,

கல்லறைக்கு முன்பாக முதலில் வந்து சேர்ந்தார்.

**அல்லேலூயா**



**“ரபூணி” (யோவான் 20:16)**

## மூன்றாம் ஸ்தலம்
# இயேசு மகதல மரியாளுக்குக் தோன்றுகிறார்

---

**எல்**

திவ்ய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம். திருச்சிலுவையாலும், உயிர்த்தெழுதலின் ஒளியாலும், நீங்கள் உலகை மீட்டுள்ளீர்.

**வாசகம் :**

இயேசு அவரிடம், "மரியா" என்றார். மரியா திரும்பிப் பார்த்து, "ரபூனி" என்றார். இந்த எபிரேயச் சொல்லுக்கு 'போதகரே' என்பது பொருள். இயேசு அவரிடம், "என்னை இப்படிப் பற்றிக் கொள்ளாதே. நான் என் தந்தையிடம் இன்னும் செல்லவில்லை. நீ என் சகோதரர்களிடம் சென்று அவர்களிடம், 'என் தந்தையும் உங்கள் தந்தையும் என் கடவுளும் உங்கள் கடவுளுமானவரிடம் செல்லவிருக்கிறேன்' எனச்சொல் " என்றார். **(யோவான் 20: 16-17)**

*செபத்திற்காக மௌனமாக இருக்கவும்*

**செபம் :**

தந்தையாகிய கடவுளே, எல்லா மக்களும் மீட்படையவும்,
உமது உண்மையை அறியவும் இயேசு விரும்புகிறார்.
படைப்பனைத்திற்கும் நற்செய்தியைப் பறைசாற்ற,
தேவையான வேளையாட்களை அனுப்புங்கள். உமது
மக்களை வாழ்வு தரும் வார்த்தையினால் ஒன்றிணைத்து
அருட்சானத்தின் வழியாக மீட்படைய அவர்களை வல்லமை
படுத்துவீராக. ஆமென்.

**அல்லேலூயா**

அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா
அன்று இயேசுவின் உடலை பதனப்படுத்த,
மாகதல மரியாவும், சலோமியாவும்,
யாக்கோபின் தாயாரும் தாமதித்தார்கள்
**அல்லேலூயா**



**“வழிநெடுகிலும் நீங்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டிருப்பது என்ன?” (லூக்காஸ்24:13-27)**

## நான்காம் ஸ்தலம்

# எம்மாவு வழியில் சீடரைச் சந்தித்தல்

---

**எல்**

திவ்ய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம். திருச்சிலுவையாலும், உயிர்த்தெழுதலின் ஒளியாலும், நீங்கள் உலகை மீட்டுள்ளீர்.

**வாசகம் :**
இப்படி அவர்கள் உரையாடிக் கொண்டும் வினவிக்கொண்டும் சென்றபோது, இயேசு நெருங்கி வந்து அவர்களோடு நடந்து சென்றார். ஆனால் அவர் யார் என்று அறிந்து உணர முடியாதவாறு அவர்கள் கண்களை மறைக்கப்பட்டிருந்தன. அவர்கள் அவர்களை நோக்கி "வழி நெடுகிலும் நீங்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டிருப்பது என்ன?" என்று கேட்டார். அவர்கள் முகவாட்டத்தோடு நின்றார்கள். இயேசு அவர்களை நோக்கி, "அறிவிலிகளே! இறைவாக்கினர்கள் உரைத்த எல்லாவற்றையும் நம்ப இயலாத மந்த உள்ளத்தினரே! மெசியா தாம் மாட்சி அடைவதற்குமுன் இத்துன்பங்களைப் பட வேண்டும்மல்லவா!" என்றார். மேலும் மோசேமுதல் இறைவாகினர்வரை அனைவரின் நூல்களிலும் தம்மைக் குறித்து எழுதப்படட் யாவற்றையும் அவர் அவர்களுக்கு விளக்கினார். **(லூக்காஸ் 24:15-17, 25-27)**

*செபத்திற்காக மௌனமாக இருக்கவும்*

**செபம் :**
ஆண்டவரே, எங்களுடன் தங்கி, உண்மையான உரையாடலின் வழி எங்கள் உள்ளங்களை திறந்தருளும். அப்பம் பிட்குதலின் வழியாக ஆண்டவரை அறிந்து கொண்டோம். உமது அன்பினால் தொடப்பட்டு, அமைதி மற்றும் உண்மையான மனமாற்றத்தையும் புதுப்பிக்கப்பட்ட மனிதகுலத்தையும் நோக்கி எங்களை வழிநடத்தும். மனந்திரும்புதலுக்கும் மன்னிப்புக்கும் சாட்சிகளாக எங்களை அனுப்புங்கள். ஆமென்.

**அல்லேலூயா**
அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா
அன்றிரவு அப்போஸ்தலர்கள் இருந்தார்கள்,
அன்பான ஆண்டவர் அவர்கள் நடுவே வந்து,
அனைவருக்கும் என் அமைதி உண்டாகட்டும் என்றார்.
**அல்லேலூயா**



**அவரை அடையாளம் கண்டுகொண்டார்கள்**
**(லூக்காஸ் 24:28-32)**

## ஐந்தாம்  ஸ்தலம்
# இயேசு தன்னை அப்பம் பிட்கும்போது வெளிப்படுத்துகிறார்

---

**எல்**

திவ்ய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.
திருச்சிலுவையாலும், உயிர்த்தெழுதலின் ஒளியாலும், நீங்கள் உலகை மீட்டுள்ளீர்.

**வாசகம் :**
அவர்கள் அவரிடம், "எங்களோடு தங்கும்; ஏனெனில் மாலை நேரம் ஆயிற்று; பொழுதும் போயிற்று" என்றுக் கூறிக் கட்டாயப் படுத்தி அவரை இணங்கவைத்தார்கள். அவர் அங்குத் தங்குமாறு அவர்களோடு சென்றார். அவர்களோடு அவர் பந்தியில் அமர்ந்திருந்தாபோது அப்பத்தை எடுத்து, கடவுளைப் போற்றி, பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார். அப்போது அவர்கள் கண்கள் திறந்தன. அவர்களும் அவரை அடையாளம் கண்டுக்கொண்டார்கள். உடனே அவர் அவர்களிடமிருந்து மறைந்துபோனார். அப்போது, அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி, "வழியிலே அவர் நம்மோடு பேசி, மறைநூலை விளக்கும்போது நம் உள்ளம் பற்றி எரியவில்லையா?" என்று பேசிக்கொண்டார்கள். **(லூக்காஸ் 24: 29-32)**

*செபத்திற்காக மௌனமாக இருக்கவும்*

**செபம் :**
உயிர்த்த இயேசுவே, உங்களுடன் நடக்கவும், உமது வார்த்தைகளைக் கேட்கவும், பேசவும், எங்களுடைய கண்கள் திறக்கப்படவும் நாங்கள் ஏங்குகிறோம். திருவிருந்து வழியாக உங்களை எங்களுக்குக் காட்டுவதுபோல நாங்களும் நண்பர்களையும் அந்நியர்களையும் வரவேற்க காற்றுத்தாரும். ஆமென்.

**அல்லேலூயா**
அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா
தோமா, முதலில் செய்தியைக் கேட்டபோது,
உயிர்த்தெழுந்த இயேசுவை அவர்கள் எப்படிக் கண்டார்கள்,
என்று, சீடர்களின் வார்த்தையை அவர் சந்தேகப்படுகிறார்.
**அல்லேலூயா**



**“உங்களுக்கு அமைதி உரித்தாகுக!” (லூக்கா 24: 36-39)**

## ஆறாம் ஸ்தலம்
# இயேசு சீடர்களுக்குத் தோன்றுதல்.

---

**எல்**

திவ்ய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம். திருச்சிலுவையாலும், உயிர்த்தெழுதலின் ஒளியாலும், நீங்கள் உலகை மீட்டுள்ளீர்..

**வாசகம் :**

அதற்கு அவர், " நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள்? ஏன் இவ்வாறு உங்கள் உள்ளத்தில் ஐயம் கொள்ளுகிறீர்கள்? என் கைகளையும் கால்களையும் பாருங்கள், நானே தான். என்னைத் தொட்டுத் பாருங்கள்; எனக்கு எலும்பும் சதையும் இருப்பதைக் காண்கிறீர்களே; இவை ஆவிக்குத் கிடையாதே" என்று அவர்களிடம் கூறினார்; இப்படிச் சொல்லித் தம் கைகளையும் கால்களையும் அவர்களுக்குக் காண்பித்தார்.
**(லூக்காஸ் 24: 38-40)**

*செபத்திற்காக மௌனமாக இருக்கவும்*

**செபம் :**

மாறாத வல்லமையும் ஒளியும் கொண்ட கடவுளே, உமது திருச்சபையின் முழு சமூகத்தின் மீதும் தயவும் கருணையும் கொண்டு கண் நோக்கும். அனைத்து மக்களையும் காப்பாற்றும், விழுந்தவர்களை தூக்கிவிடும், பழையதைப் புதியதாக்கும், எல்லாவற்றையும் முழுமையாக்கியருளும். உம்மோடு என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற உமது திருமகன் இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

**அல்லேலூயா**

அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா
தோமா என் காயமடைந்த விலாவை, பார்;
இதோ, என் கைகள், என் கால்கள் என்றார்.
விசுவாசமற்றவர் அல்ல, விசுவாசியாக இருங்கள்.
**அல்லேலூயா**



**எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ அவை மன்னிக்கப்படும். (யோவான் 20:22-23)**

## ஏழாம் ஸ்தலம்

## உயிர்த்தெழுந்த இயேசு அவர்கள்மேல் ஊதி, அமைதியையும் மன்னிக்கும் சக்தியையும் அளிக்கிறார்.

---

எல்

திவ்ய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம். திருச்சிலுவையாலும், உயிர்த்தெழுதலின் ஒளியாலும், நீங்கள் உலகை மீட்டுள்ளீர்.

**வாசகம் :**

அன்று வாரத்தின் முதல் நாள். அது மாலை வேளை. யூதர்களுக்கு அஞ்சிச் சீடர்கள் தாங்கள் இருந்த இடத்தின் கதவுகளை மூடிவைத்திருந்தார்கள். அப்போது இயேசு அங்கு வந்து அவர்கள் நடுவில் நின்று, "உங்களுக்கு அமைதி உரித்தாகுக!"என்று வாழ்த்தினார்.இவ்வாறு சொல்லிய பின் அவர் தம் கைகளையும் விலாவையும் அவர்களிடம் காட்டினார். ஆண்டவரைக் கண்டதால் சீடர்கள் மகிழ்ச்சி கொண்டார்கள். இயேசு மீண்டும் அவர்களை நோக்கி, "உங்களுக்கு அமைதி உரித்தாகுக! தந்தை என்னை அனுப்பியது போல நானும் உங்களை அனுப்புகிறேன்" என்றார். இதைச் சொன்ன பின் அவர் அவர்கள்மேல் ஊதி, "தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள். எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ, அவை மன்னிக்கப்படா " என்றார். **(யோவான் 20: 19-23)**

*செபத்திற்காக மௌனமாக இருக்கவும்*

**செபம் :**

முழுமையான **அமைதி** கொண்ட இறைவா, **வன்முறை**யும் **கொடுமை**யும் உம்மிடம் இல்லை. அமைதியுடையவர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் ஒற்றுமையை உண்டாக்கும் நன்மைதனத்தை உறுதியாக பற்றிக்கொள்ளவும், எதிரிகளாக இருப்பவர்கள் தங்கள் வெறுப்பை மறந்து குணமடையட்டும். **ஆமென்**

**அல்லேலூயா**

அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா
தோமா மறுதலிகாமல் அவர் கால்களையும்,
கைகளையும், விலாவையும் பார்த்து;
நீரே என் ஆண்டவரும், தேவனுமாக இருக்கிறீர், என்று அவர் அழுதார் **அல்லேலூயா**



**ஐயம் தவிர்த்து நம்பிக்கைக்கொள்  (யோவான் 20:24-29)**

## எட்டாம் ஸ்தலம்
# உயிர்த்தெழுந்த இயேசு தோமாவின் விசுவாசத்தைப் பலப்படுத்துகிறார்

---

**எல்**

திவ்ய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம். திருச்சிலுவையாலும், உயிர்த்தெழுதலின் ஒளியாலும், நீங்கள் உலகை மீட்டுள்ளீர்.

**வாசகம் :**
மற்றச் சீடர்கள் அவரிடம், "ஆண்டவரைக் கண்டோம்" என்றார்கள். தோமா அவர்களிடம், "அவருடைய கைகளில் ஆணிகளால் ஏற்பட்ட தழும்பைப் பார்த்து, அதில் என் விரலை விட்டு, அவர் விலாவில் என் கையை இட்டலன்றி நான் நம்பமாட்டேன்" என்றார். எட்டு நாள்களுக்குப்பின் அவருடைய சீடர்கள் மீண்டும் உள்ளே கூடியிருந்தார்கள். அன்று தோமாவும் அவர்களோடு இருந்தார். கதவுகள் பூட்டப்பட்டிருந்தும் இயேசு உள்ளே வந்து அவர்கள் நடுவில் நின்று, "உங்களுக்கு அமைதி உரித்தாகுக!" என்று வாழ்த்தினார். பின்னர் அவர் தோமாவிடம், "இதோ! என் கைகள்.இங்கே உன் விரலை இடு. உன் கையை நீட்டி என் விலாவில் இடு. ஐயம் தவிர்த்து நம்பிக்கைகொள்" என்றார். "நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள் !!" என்றார். இயேசு அவரிடம், "நீ என்னைக் கண்டதால் நம்பினாய். காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர்" என்றார். **(யோவான் 20: 25-29)**

*செபத்திற்காக மௌனமாக இருக்கவும்*

**செபம் :**
விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, இரக்கத்தின் தேவனே, இனிமேல் நாம் இயேசுவை மரித்தோரிடையே தேடுவதில்லை, ஏனெனில் அவர் உயிர்த்துவிட்டார். மரணத்தின் நீரிலிருந்து, நீர் எங்களை அவரோடு எழுப்பி, உமது வாழ்வின் பரிசை எங்களுக்குள் புதுப்பிக்கிறீர். ஆமென்.

**அல்லேலூயா**
அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா
காணாதவர்கள் எவ்வளவு பாக்கியவான்கள்,
இன்னும் அவர்களுடைய விசுவாசம் எப்போதும் இருந்து வருகிறது
ஏனென்றால் அவர்களுடைய நித்திய ஜீவன் வெல்லும்.
**அல்லேலூயா**



**அங்கு நிற்பவர் ஆண்டவர்தாம்" (யோவான் 21:4-8)**

## ஒன்பதாவது ஸ்தலம்

## உயிர்த்தெழுந்த இயேசு திபேரியா கடலின் அருகே சீடர்களுடன் உணவருந்துகிறார்

---

எல்

திவ்ய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம். திருச்சிலுவையாலும், உயிர்த்தெழுதலின் ஒளியாலும், நீங்கள் உலகை மீட்டுள்ளீர்..

**வாசகம் :**
இயேசு அவர்களிடம், “நீங்கள் இப்போது பிடித்தவற்றில் சில மீன்களைக் கொண்டு வாருங்கள் என்றார்.சீமோன் பேதுரு படகில் ஏறி, வலையைக் கரைக்கு இழுத்தார். வலை நிறைய பெரிய மீன்கள் இருந்தன. அவற்றின் எண்ணிக்கை நூற்று ஐம்பத்து மூன்று. இத்தனை மீன்கள் இருந்தும் வலை கிழியவில்லை. இயேசு அவர்களிடம், “உணவருந்த வாருங்கள்” என்றார். சீடர்களுள் எவரும், ‘நீர் யார்?’ என்று இயேசுவிடம் கேட்கத் துணியவில்லை. ஏனெனில், அவர் ஆண்டவர் தாம் என்று அவர்கள் அறிந்து கொண்டார்கள். . **(யோவான் 21:10-12)**

*செபத்திற்காக மௌனமாக இருக்கவும்*

**செபம் :**
விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, அனைத்து உண்மைகளின் தேவனே,  ஒரு காலத்தில் இருளில் இருந்த மக்கள் உமது வார்த்தையைக் கேட்டு, உமது மகன் கல்லறையிலிருந்து உயிர்த்த போது அவரைப் பின்பற்றினார்கள். இந்தப் புதிதாகப் பிறந்த மக்களின் ஜெபத்தைக் கேட்டு, உமது அழைப்புக்குப் பதிலளிக்க உமது திருஅவையை பலப்படுத்துங்கள். இறுதிவரை உமது பிரசன்னத்தில் நிலைத்து நிற்க நாங்கள் எழுந்து, உமது ஒளிக்கு வருவோம். இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

**அல்லேலூயா**
அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா
ஞாயிற்றுக்கிழமை விடியற்காலையில்,
சோகமான சீடர்கள் இயேசு வைக்கப்பட்டிருந்த
கல்லறையைப் பார்க்கச் சென்றனர். **அல்லேலூயா**



**“என் ஆட்டுக்குட்டிகளைப் பேணி வளர்" (யோவான் 21:15-17)**

## பத்தாம் ஸ்தலம்

## உயிர்த்தெழுந்த இயேசு பேதுருவை மன்னித்து, அவருடைய ஆடுகளை மேய்க்க அவரை வழியுறுத்துகிறார்.

---

**எல்**

திவ்ய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம். திருச்சிலுவையாலும், உயிர்த்தெழுதலின் ஒளியாலும், நீங்கள் உலகை மீட்டுள்ளீர்.

### வாசகம் :

அவர்கள் உணவருந்தியபின் இயேசு சீமோன் பேதுருவிடம், "யோவானின் மகன் சீமோனே, நீ இவர்களைவிட மிகுதியாக என்மீது அன்பு செலுத்துகிறாயா?"என்று கேட்டார். அவர் இயேசுவிடம், "ஆம் ஆண்டவரே, எனக்கு உம்மிடம் அன்பு உண்டு என உமக்குத் தெரியுமே!" என்றார். இயேசு அவரிடம், "என் ஆட்டுக்குட்டிகளைப் பேணி வளர்" என்றார். இரண்டாம் முறையாக இயேசு அவரிடம், "யோவானின் மகன் சீமோனே, நீ என்மீது அன்பு செலுத்துகிறாயா?"என்று கேட்டார். அவர் இயேசுவிடம், "ஆம் ஆண்டவரே, எனக்கு உம்மிடம் அன்பு உண்டு என உமக்குத் தெரியுமே!" என்றார். இயேசு அவரிடம், "என் ஆடுகளை மேய்" என்றார். மூன்றாம் முறையாக இயேசு அவரிடம், "யோவானின் மகன் சீமோனே, உனக்கு என்னிடம் அன்பு உண்டா?" என்று கேட்டார். 'உனக்கு என்னிடம் அன்பு உண்டா?' என்று இயேசு மூன்றாம் முறை கேட்டதால் பேதுரு துயருற்று, அவரிடம், "ஆண்டவரே உமக்கு எல்லாம் தெரியுமே! எனக்கு உம்மீது அன்பு உண்டு என்பது நீர் அறியாத ஒன்றா?" என்றார். இயேசு அவரிடம், "என் ஆடுகளைப் பேணிவளர்" என்றார். **(யோவான் 21:15-17)**

*செபத்திற்காக மௌனமாக இருக்கவும்*

### செபம் :

தந்தேயே, உமது அன்பின் நெருப்பால் எங்கள் இதயங்களை நிரப்பும். நீர் எங்களுக்குக் கொடுக்கும் நல்ல கரியங்களை பகிர்ந்து கொள்வதன் மூலம், ஒவ்வொரு மனிதனுக்கும் நீதியையும் சமத்துவத்தையும் அளித்து, அனைத்துப் பிரிவினைகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்து, அன்பு மற்றும் அமைதியின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட ஒரு சமூகத்தையும் நாங்கள் உறுதி செய்வோம். ஆமென்.

### அல்லேலூயா

அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா
வெள்ளை உடை அணிந்த ஒரு வானதூதரை அவர்கள் காண்கிறார்கள்,
அவர் அமர்ந்து மூவரிடமும்,
உங்கள் ஆண்டவர் கலிலேயாவுக்குச் சென்றுவிட்டார்,
**அல்லேலூயா**



**நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள் (மத்தேயு 28:16-20)**

## பதினொன்றாம் ஸ்தலம்

# உயிர்த்தெழுந்த இயேசு சீடர்களை உலகிற்கு அனுப்புகிறார்

**எல்**

திவ்ய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம். திருச்சிலுவையாலும், உயிர்த்தெழுதலின் ஒளியாலும், நீங்கள் உலகை மீட்டுள்ளீர்.

**வாசகம் :**

எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்; தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள். இதோ! உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்" என்று கூறினார். **(மத்தேயு 28: 19-20)**

*செபத்திற்காக மௌனமாக இருக்கவும்*

**செபம் :**

அனைத்து படைப்புகளின் இறைவனே, இயேசுவை கல்லறையிலிருந்து உயிருடன் எழுப்பி எல்லா இனத்தாரையும் சீடர்களாக்கவும், இயேசுவின் கட்டளைகளை நிறைவேற்றவும், உலக முடிவு வரை அவருடைய பிரசன்னத்தை உணரவும் ஆவியின் வல்லமையால் நம்மைப் பலப்படுத்துவாராக. ஆமென்.

**அல்லேலூயா**

அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா
நாங்கள் பரிசுத்த திருச்சபையுடன் ஒன்றுபடுகிறோம்,
என்றென்றும் நியாயமாகவும் சரியாகவும் இருப்பதால்,
ஒளியின் ராஜாவுக்கு மகிமை. **அல்லேலூயா**



**அவர் மேலே எடுத்துக்கொள்ளப்பட்டார். (திருத்தூதர் பணிகள் 1:9-11)**

## பன்னிரெண்டாம் ஸ்தலம்

உயிர்த்தெழுந்த இயேசு
பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்

---

**எல்**

திவ்ய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம். திருச்சிலுவையாலும், உயிர்த்தெழுதலின் ஒளியாலும், நீங்கள் உலகை மீட்டுள்ளீர்.

**வாசகம் :**

இவ்வாறு அவர்களோடு பேசியபின்பு ஆண்டவர் இயேசு விண்ணேற்றமடைந்து கடவுளின் வலப்புறம் அமர்ந்தார். அவர்கள் புறப்பட்டுச் சென்று எங்கும் நற்செய்தியைப் பறைசாற்றினர். ஆண்டவரும் உடனிருந்து செயல்பட்டு, நிகழ்ந்த அரும் அடையாளங்களால் அவர்களுடைய வார்த்தையை உறுதிப்படுத்தினார்.(**மாற்கு 16:19-20)**

*செபத்திற்காக மௌனமாக இருக்கவும்*

**செபம் :**

நித்திய தேவனே, உமது வல்லமையால் எங்களை உடுத்துவீர். நம்புகிறவர்களிடம் கடவுளின் மகத்தான வல்லமை செயல்படுவதை கண்டுணர நம் இதயங்கள் விழித்தெழுவதாக. அந்த வல்லமையுடன், நம் மீட்பின் நற்செய்தியை அனைவருக்கும் வெளிப்படையாக அறிவிப்போம். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்துவின் வழியாக உம்மை நாங்கள் மன்றாடுகிறோம். ஆமென்.

அல்லேலூயா

அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா
பாஸ்கா ஆசீர்வாதங்களுக்காக,
கடவுளுக்கு நமது பணிவான நன்றியைக் காட்டுவோம்,
அவருக்குப் பொருத்தமான புகழைச் செலுத்துவோம்
அல்லேலூயா



**ஒரே மனத்தோடு இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தார்கள். (திருத்தூதர் பணிகள் (1:12-14)**

## பதிமூன்றாம் ஸ்தலம்

# மரியாளும் சீடர்களும் தூய ஆவியாருக்காக காத்திருக்கிறார்கள்

**எல்**

திவ்ய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம். திருச்சிலுவையாலும், உயிர்த்தெழுதலின் ஒளியாலும், நீங்கள் உலகை மீட்டுள்ளீர்.

**வாசகம் :**

பேதுரு, யோவான், யாக்கோபு, அந்திரேயா, பிலிப்பு, தோமா, பர்த்தலமேயு, மத்தேயு, அல்பேயுவின் மகன் யாக்கோபு, தீவிரவாதியான சீமோன், யாக்கோபின் மகன் யூதா ஆகியோர் திரும்பி வந்தபின் தாங்கள் தங்கியிருந்த மேல்மாடிக்குச் சென்றார்கள். அவர்கள் அனைவரும் சில பெண்களோடும், இயேசுவின் சகோதரர்களோடும், அவருடைய தாய் மரியாவோடும் இணைந்து ஒரே மனத்தோடு இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தார்கள். **(திப 1: 13-14)**

*செபத்திற்காக மௌனமாக இருக்கவும்*

**செபம் :**

மிகவும் தூய்மையான தந்தையே, உமது திருஅவை இங்கு ஒன்றுகூடியிள்ளது. செபத்தோடும் ஆராதனையோடும் முதல் சீடர்களைப் போல் அன்னை மரியாளோடும் மேல் மாடி அறையில் இருத்தது போல், தூய ஆவியானவரின் மகிழ்வுடன் நீர் தந்த செயல்களை நிறைவேற்ற அருள் தாரும். கிறிஸ்துவின் பாடுகளை மகிழ்வுடன் அவரது மாட்சி வெளிப்படும்போது பகிர்ந்து மகிழ கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். **ஆமென்**.

**அல்லேலூயா**

அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா
இந்த மிகவும் புனிதமான நாளில்,
உங்கள் இதயங்களும் குரல்களும் கடவுளிடம்,
புகழிலும், யூபிலியிலும், துதியிலும் ஏறெடுக்கின்றன.
**அல்லேலூயா**



**அவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டனர்.**
**(திருத்தூதர் பணிகள் 2:2-4)**

## பதினான்காம் ஸ்தலம்

# உயிர்த்தெழுந்த இயேசு பரிசுத்த ஆவியை அனுப்புகிறார்.

---

**எல்**

திவ்ய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம். திருச்சிலுவையாலும், உயிர்த்தெழுதலின் ஒளியாலும், நீங்கள் உலகை மீட்டுள்ளீர்.

**வாசகம் :**

திடீரென்று கொடுங்காற்று வீசுவது போன்று ஓர் இரைச்சல் வானத்திலிருந்து உண்டாகி, அவர்கள் அமர்ந்திருந்த வீடு முழுவதும் ஒலித்தது. மேலும், நெருப்புப்போன்ற பிளவுற்ற நாவுகள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்ததை அவர்கள் கண்டார்கள். அவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டனர். தூய ஆவியின் தூண்டுதலால் அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறான மொழிகளில் பேசத்தொடங்கினார்கள்.

**(திப 2: 2-4)**

*செபத்திற்காக மௌனமாக இருக்கவும்*

**செபம் :**

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, இந்த ஆன்மீகப் பயணத்தின் வழியாக, உமது வெளிப்படுத்தப்பட்ட அன்பின் மறைபொருளின் முழுமையை எங்களுக்கு நினைவூட்டினீர். ஆவியின் சுடரைப் பெற தயாரயிராக ஒன்று கூடியிருக்கும் உமது மக்களை கண்ணோக்கும். ஆவியின் சுடர் நம் இதயங்களில் நிலைத்து, சொல் மற்றும் மொழியின் பிளவுகளைச் சிதறடிக்கட்டும். ஒரே குரலாலும் ஒரே பாடலாலும், உமது பெயரை மகிழ்ச்சியோடும் நன்றியோடும் துதிப்போமாக. இதை நம்முடைய ஆண்டவராகிய கிறிஸ்துவின் வழியாகவும், ஆவியின் வல்லமையினாலும், இப்பொழுதும் என்றென்றும் அருளும். ஆமென்.

**அல்லேலூயா**

அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா
கர்த்தருடைய மகன்களே, மகள்களே,
மகிமையின் ராஜா, போற்றப்பட்டார்,
மரணத்திலிருந்து வாழ்க்கைக்கு **மீட்டெடுக்கப்பட்டுள்**ளார்.

**அல்லேலூயா**



# இறுதி ஜெபம்

**வாசகம்:**
பாம்புகளைத் தம் கையால் பிடிப்பர். கொல்லும் நஞ்சைக் குடித்தாலும் அது அவர்களுக்குத் தீங்கு இழைக்காது. அவர்கள் உடல் நலமற்றோர்மீது கைகளை வைக்க, அவர்கள் குணமடைவர்”
என்று கூறினார். (மாற்கு 16:8)

**ஜெபம்:**
ஒளியின் பாதை வழியாக, உயிர்த்தெழுந்த இறைவனுடன் நமது திருப்பயணத்தைப் பகிர்ந்து கொண்டோம். கிறிஸ்துவின் ஊழியர்களாகவும் சாட்சிகளாகவும்,
இப்போது நமது மீட்பர் நமக்குக் கற்பித்த வழியில் ஜெபிப்போம்:

**எல்:**
விண்ணுலகில் இருக்கின்ற எங்கள்.....

**ஜெபம்:**
ஆண்டவரே, நாங்கள் செய்யும் அனைத்தும் உமது தூண்டுதலால் தொடங்கி, உமது உதவியுடன் தொடரட்டும், உமது வழிகாட்டுதலின் கீழ் முழுமையடையட்டும். இதை எங்கள் உயிர்த்த ஆண்டவராகிய கிறிஸ்துவின் வழியாக நாங்கள் மன்றாடுகிறோம். ஆமென்.

**சமாதானம்....**

# SUMBER DAN PENGAKUAN


**Sumber Utama**

Via Lucis, The Way of Light - Stations of the Resurrection. A booklet was a component of the award-winning program, Jubilee 2000, and was produced by the Archdiocese of Detroit for Year Five (2005), “Living Christ’s Presence.” Translation facilitated by Rev. John West, Archdiocese of Detroit. The Official Vatican Prayerbook for the Jubilee Year 2000, Pilgrim Prayers, is cited within this booklet as sourced with permission.

Holy Bible. The New Revised Standard Version, Catholic Edition. Imprimatur Canadian Conference of Catholic Bishops (October 15, 1991).

The Harrowing of Hell. Retrieved February 2, 2025, from: https://www.flickr.com/photos/jimforest/159475497/in/photostream/

**Sumber Sekunder**

Byer, Glenn. Via Lucis, The Way of Light. New London: Novalis Publishing, 2013.

Directory on Popular Piety and the Liturgy. December 2001. Article 153. Retrieved February 23, 2023, from: https://www.vatican.va/roman_curia/congregations/ccdds/documents/rc_con_ccdds_doc_20020513_versdirettorio_en.html

Pilgrim Prayers: The Official Vatican Prayerbook for the Jubilee Year 2000. New York: The Continuum Publishing Company, 1999.


Gambar oleh Maria Snehlata Somany.

## சிலுவை என்பது...

சிலுவை கிறிஸ்தவர்களின் நம்பிக்கை.
சிலுவை என்பது இறந்தவர்களின் உயிர்த்தெழுதல்.
சிலுவை என்பது தொலைந்து போனவர்களின் வழி.
சிலுவை தொலைந்து போனவர்களின் மீட்பர்.
சிலுவை என்பது ஊனமுற்றோரின் ஊன்றுகோள்.
சிலுவை என்பது குருடர்களின் வழிகாட்டி.
சிலுவை என்பது பலவீனமானவர்களின் பலம்.
சிலுவை என்பது நோயுற்றவர்களின் மருத்துவர்.
சிலுவை என்பது குருத்துவத்தின் நோக்கம்.
சிலுவை என்பது நம்பிக்கையற்றவர்களின் நம்பிக்கை.
சிலுவை என்பது அடிமைகளின் சுதந்திரம்.
சிலுவை என்பது அரசர்களின் பலம்.
சிலுவை என்பது விதைகளின் ஊற்று.
சிலுவை என்பது அடிமைகளின் ஆறுதல்.
சிலுவை என்பது தண்ணீரைத் தேடுபவர்களின் ஆதாரம்.
சிலுவை என்பது நிர்வாணர்களின் உடை.

தந்தையே, திரு சிலுவைக்காக நாங்கள்
உங்களுக்கு நன்றி கூறுகிறோம்.
ஆமென்

# சிலுவை ஸ்தலங்கள் ஜெபிப்பதற்கு முன் ஜெபம்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே,
சொல்லமுடியாத அன்புடன் எனக்காகே மரிக்க
இந்த திருப்பயணத்தை மேற்கொண்டீர்,
நான் பலமுறை தகுதியற்ற முறையில் உம்மை கைவிட்டிருக்கிறேன்;
ஆனால் இப்போது நான் என் முழு இருதயத்தோடும் உம்மை நேசிக்கிறேன்,
நான் உம்மை நேசிப்பதால்,
உங்களை எப்போதாவது புண்படுத்தியதற்காக நான் மனம் வருந்துகிறேன்.

என் ஆண்டவரே, என்னை மன்னியுங்கள்,
இந்தப் பயணத்தில் உங்களுடன் நானும் பயணிக்க அனுமதியுங்கள்.
என்மேல் அன்பிற்காக நீர் இறக்கப் சென்றீர்;
என் அன்பான மீட்பரே,
உம் அன்பிற்காக மரிக்கவும் விரும்புகிறேன்.
என் இயேசுவே, நான் எப்போதும் உம்முடன் வாழ்விலும் இறப்பிலும் ஒன்றித்திருப்பேன்.

ஸ்தலங்களை ஜெபித்த பிறகு, ஜெபிக்கவும்:
5 விண்ணுலகில் இருக்கின்ற....
5 அருள் நிறைந்த மரியே.....
5 தந்தைக்கும் மகனுக்கும்  தூய ஆவியார்க்கும்...

இயேசு கிறிஸ்துவின் துன்பத்திற்கு மரியாதை செலுத்தும் பொருட்டும், திருத்தந்தை நோக்கத்திற்கு ஒருமுறை ஜெபிக்கவும்.

# மரித்த இயேசு உயிர்த்து விட்டார்

மரித்த இயேசு உயிர்த்து விட்டார் அல்லேலூயா
mariththa Yesu uyirththu vittar allaelooyaa
மன்னன் இயேசு ஜீவிக்கிறார் அல்லேலூயா
mannan Yesu jeevikkiraar allaelooyaa

அல்லேலூயா ஜீவிக்கிறார் – 2
allaelooyaa jeevikkiraar - 2
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
allaelooyaa allaelooyaa allaelooyaa

1. மரணம் அவரைத் தடுத்து நிறுத்த முடியவில்லையே
1. maranam avaraith thaduththu niruththa mutiyavillaiyae
கல்லறையோ கட்டிக்காக்க முடியவில்லையே
kallaraiyo kattikkaakka mutiyavillaiyae
யூதசிங்கம் கிறிஸ்துராஜா வெற்றி பெற்றாரே
yoothasingam kiristhuraajaa vetti pettarae
சோர்ந்து போன மகனே நீ துள்ளிப் பாடிடு
sornthu pona makanae nee thullip paadidu

2. கண்ணீரோடு மரியாள் போல அவரைத் தேடுவோம்
2. kannnneerodu mariyaal pola avaraith thaeduvom
கர்த்தர் இயேசு நமக்கும் இன்று காட்சி தருவார்
karththar Yesu namakkum intu kaatchi tharuvaar
கனிவோடு பெயர்சொல்லி அழைத்திடுவார்
kanivodu peyarsolli alaiththiduvaar
கலக்கமின்றி காலமெல்லாம் சாட்சி பகர்வோம்
kalakkaminti kaalamellaam saatchi pakarvom

# அமைதி தேடி அலையும் நெஞ்சமே

அமைதி தேடி அலையும் நெஞ்சமே
amaithi thaeti alaiyum nenjamae
அனைத்தும் இங்கு அவரில் தஞ்சமே – 2
anaiththum ingu avaril thanjamae – 2

நிலையான சொந்தம் நீங்காத பந்தம் – 2
nilaiyaana sontham neengaatha pantham – 2
அவரின்றி வேறில்லையே
avarinti vaerillaiyae

போற்றுவேன் என் தேவனைப் பறைசாற்றுவேன்
pottuvaen en thaevanaip paraisaattuvaen
என் நாதனை எந்நாளுமே என் வாழ்விலே – 2
en naathanai ennaalumae en vaalvilae – 2
காடு மேடு பள்ளம் என்று கால்கள் சோர்ந்து
kaadu maedu pallam entu kaalkal sornthu
அலைந்த ஆடு நாடுதே அது தேடுதே – 2
alaintha aadu naaduthae athu thaeduthae – 2

இறைவனே என் இதயமே இந்த இயற்கையின்
iraivanae en ithayamae intha iyarkaiyin
நல் இயக்கமே என் தேவனே என் தலைவனே – 2
nal iyakkamae en thaevanae en thalaivanae – 2
பரந்து விரிந்த உலகம் படைத்து சிறந்த படைப்பாய்
paranthu virintha ulakam pataiththu sirantha pataippaay
என்னைக் கண்ட தேவனே என் ஜீவனே – 2
ennaik kannda thaevanae en jeevanae – 2

# என்னைத் தேடி இயேசு வந்தார்

என்னைத் தேடி இயேசு வந்தார்
ennaith thaeti Yesu vanthaar
எந்தன் வாழ்வை மாற்றி விட்டார்
enthan vaalvai maatti vittar
அல்லேலூயா நான் பாடுவேன்
allaelooyaa naan paaduvaen
ஆடிப்பாடித் துதித்திடுவேன்
aatippaatith thuthiththiduvaen

1. மகனானேன் நான் மகளானேன்
1. makanaanaen naan makalaanaen
அப்பா பிதாவே என்றழைக்கும்
appaa pithaavae entalaikkum
உரிமையை எனக்குத் தந்தார்
urimaiyai enakkuth thanthaar

2. ஆவி தந்தார் தூய ஆவி தந்தார்
2. aavi thanthaar thooya aavi thanthaar
வல்லமையும் அன்பும் ஞானமும் கொண்ட
vallamaiyum anpum njaanamum konnda
பரிசுத்த ஆவி தந்தார்
parisuththa aavi thanthaar

3. சுகமானேன் நான் சுகமானேன்
3. sukamaanaen naan sukamaanaen
இயேசு கிறிஸ்துவின் காயங்களால்
Yesu kiristhuvin kaayangalaal
சுகமானேன் சுகமானேன்
sukamaanaen sukamaanaen

Death and Life faced each other in a prodigious duel.

The Lord of life was dead, but now, alive, he triumphs.

Christ, my hope, has risen.

Yes, we are certain: Christ is truly risen.

Amen. Alleluia!

**victimae paschali laudes**

GARDENS OF
Gethsemani
CATHOLIC CEMETERY